# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081672

Cr.NO:15/2021/AC/VPM

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 30.10.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: U/S 7
   (ii) Act சட்டம்: as amended in P.C (Amendement) Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.10.2021 Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2021 Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக ✓ எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 4 கி.மீ தெற்கு திசை
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஏ. முருகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் ஆய்வுக்குழு ஆய்வாளர் (g) Address : முகவரி
   மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. ஐயப்பன், மேற்பார்வையாளர், டாஸ்மாக் கடை எண் 11472, ஜானகிபுரம், விழுப்புரம்.
   2. திரு. பார்த்தசாரதி, மேற்பார்வையாளர், டாஸ்மாக் கடை எண் 11406, ஜானகிபுரம், விழுப்புரம்.
   3. திரு. N. முருகன், விற்பனையாளர், டாஸ்மாக் கடை எண் 11472, ஜானகிபுரம், விழுப்புரம்.
   4. திரு. நாராயணன், விற்பனையாளர், டாஸ்மாக் கடை எண் 11406, ஜானகிபுரம், விழுப்புரம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 30.10.2021 ந்தேதி 14.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திருG.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர், என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், G.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.ந.க.எண்:அ(ஐ.சி.ஒ)/581/2021, நாள்:30.10.2021 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - ஜானகிபுரம் டாஸ்மாக் கடை- கடை எண்கள் 11406 மற்றும் 11472 ஆகிய டாஸ்மாக் கடைகளில் - 29.10.2021 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது- புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:29.10.2021. 29.10.2021ந்தேதி G.முருகன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், ஆகிய நான் அலுவலக பணியில் இருந்தபோது சுமார் 14.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம் ஜானகிபுரம், சுபலட்சுமி நகரில் செயல்பட்டு வரும் கடை எண் 11406 மற்றும் 11472 ஆகிய டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபாட்டில் ஒன்றுக்கு அரசு

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.10.2021 at 15.00 hrs

Name: பெயர் R. ஜேசுதாஸ்
Rank: நிலை ......................No. எண் ..........

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)p.2

நிர்ணயித்த விலையை விட கூடுதலாக ரூபாய் 10 வீதம் லஞ்சமாக வசூலிக்கப்படுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலை வேறு பணிக்காக சென்றுள்ள மாவட்ட ஆய்வுக்கு அலுவலர் திரு.ஜெகதீஸ்வரன் அவர்களிடம் நான் தெரிவித்தேன். பின்பு, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் அறிவுரைப்படி நான் கடலூர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு 15.30 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அலுவலகத்தில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.R.ஜேசுதாஸ் அவர்களை சந்தித்து விழுப்புரம் ஜானகிபுரம், சுபலட்சுமி நகரில் செயல்பட்டுவரும் கடை எண் 11406 மற்றும் 11472 ஆகிய டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபாட்டில் ஒன்றுக்கு அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதலாக ரூபாய் 10 வீதம் லஞ்சமாக வசூலிக்கப்படுவதாக கிடைத்த நம்பகமான தகவலை தெரிவித்து மேற்படி கடைகளை திடீராய்வு செய்வது சம்மந்தமாக கலந்தாலோசித்தேன். பின்பு நான், காவல் ஆய்வாளர் திரு.R.ஜேசுதாஸ் மற்றும் காவல் குழுவினருடன் சுமார் 16.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு சுமார் 16.15 மணிக்கு ஜானகிபுரம் சுபலட்சுமி நகரில் ஒரே கட்டிடத்தில் அடுத்தடுத்துள்ள டாஸ்மாக் கடை எண் 11406 மற்றும் 11472 ஆகிய கடைகளுக்கு சென்று அங்கு பணிபுரிந்தவர்களிடம், நானும், என்னுடன் வந்த காவல் குழுவினர்களையும் அறிமுகம் செய்துக்கொண்டு அவர்களிடம் கடைகளை திடீராய்வு செய்யவந்துள்ள விபரத்தை தெரிவித்தேன். அப்போது அவர்கள் பதட்டமடைந்தார்கள். பின்பு, நான் அவர்களை ஆசுவாசப்படுத்தி அவரவர் கடையில் அமரவைத்துவிட்டு அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்து கொண்டோம். பின்பு கடை எண் 11472 க்கு பாதுகாப்பிற்காக ஒரு காவலரையை நியமனம் செய்துவிட்டு, கடை எண் 11406-ன் உள்ளே சென்றோம். மேற்படி கடையானது வடக்கு நோக்கி வாயிற் கொண்டதாக இருந்தது. மேற்படி கடையில் மூன்று நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாரணை செய்ய கடையில் இருந்த பின்னர் பெயர் தெரிந்த திரு.நாராயணன் என்பவரை விசாரிக்க அவர் 11516 கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருவதாகவும், 11406 கடையின் மேற்பார்வையாளர் திரு.பார்த்தசாரதி என்பவர் விற்பனையாளர்கள் யாரும் கடைக்கு வரவில்லை என்றும், அதனால் இன்று ஒருநாள் மட்டும் தனது கடையில் பணிபுரிய வருமாறு கேட்டுக்கொண்டதின் பேரில் பணிபுரிந்து வருவதாக கூறினார். நான் கடைக்கு பொறுப்பானவர்கள் யாரும் பணிபுரியவில்லையா என கேட்டபோது 11406 கடையின் மேற்பார்வையாளர் திரு.பார்த்தசாரதி, விற்பனையாளர்கள் ராமஜெயம் மற்றும் சிவக்குமார் ஆகியோர் காலையில் இருந்து கடைக்கு வரவில்லையென்றும் கூறினார். பின்பு கடையில் இருந்த மற்ற இரண்டு நபர்கள் குறித்து அவர்களிடம் விசாரித்தபோது 1.திரு.N.கண்ணதாசன், த/பெ நாராயணன், ராஜீவ்காந்தி நகர், கே.கே.ரோடு விழுப்புரம், 2.திரு.M.சுப்ரமணி த/பெ மண்ணாங்கட்டி, அய்யூர் அகரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்றும் மேற்படி இருவரும் தனிநபர்கள் என்றும் கடை மேற்பார்வையாளர் திரு.பார்த்தசாரதி என்பவர் தினக்கூலி அடிப்படையில் கடையில் விற்பனை பணிக்காக பணியமர்த்தி உள்ளதாகவும், அதன் அடிப்படையில் கடையில் விற்பனை பணிசெய்து வருவதாகவும், மேற்படி பணிக்காக கடையின் மேற்பார்வையாளர் திரு.பார்த்தசாரதி என்பவர் தினமும் ரூ.300/- சம்பளம் கொடுப்பார் என்றும் கூறினார்கள். பின்பு மேற்படி கடையை சோதனை செய்தபோது கடையின் இருப்புக்கும் விற்பனை

தொகைக்கும் ரூபாய் 13,560/- அதிகமாக இருந்தது. மேற்படி தொகை குறித்து விற்பனையாளர் திரு.நாராயணனிடம் கேட்க அவர் மது பாட்டில்கள் விற்பனை செய்தபோது பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதலாக வாடிக்கையாளர்களிடம் இருந்து வாங்கிய தொகை மற்றும் ஏற்கனவே மேற்படி வகையில் கூடுதலாக வசூலித்து கடையில் இருந்த தொகை என்றும் கூறினார். எனவே, மேற்படி தொகை வாடிக்கையாளர்களிடம் இருந்து லஞ்சமாக பெற்ற கணக்கில் வராத தொகை என தெரியவந்ததால் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு 11406 கடையின் கிழக்கு பக்கத்தில் பூட்டப்பட்டிருந்த குடோனில் என்ன இருக்கிறது என விசாரிக்க அவர் அந்த குடோனுக்கும் கடைக்கும் சம்மந்தம் இல்லையென்றும், அதில் மது பாட்டில் வைக்கப்பட்டுள்ளதாக கூறினார். பின்பு மேற்படி குடோனை திறக்க சொல்ல விற்பனையாளர் நாராயணன் தன்னிடம் இருந்த சாவிகளை கொண்டு திறந்தார். அந்த குடோனுள்ளே சோதனை செய்தபோது கீழ் கண்ட அட்டவணையில் கண்டுள்ள மதுபாட்டில்கள் சட்டத்திற்கு விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

<u>கடை எண் 11406 அருகே உள்ள குடோனில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டில்களின் விபரம்</u>

| வரிசை எண் | மது பாட்டில்களின் விபரம் | எண்ணிக்கை மற்றும் ஒரு பாட்டிலின் விலை | மொத்த மதிப்பு ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | Royal Accord Beer Bottle | 190X130 | 24,700 |
| 2. | Stern Beer Bottle | 36X140 | 5,040 |
| 3. | KF Blue Beer Bottle | 348X150 | 52,200 |
| 4. | KF select Beer Bottle | 24X130 | 3,120 |
| 5. | SNJ 10000 Beer Bottle | 104X140 | 14,560 |
| 6. | Zingoro Beer Bottle | 72X140 | 10,080 |
| 7. | KF (Mini) Beer Bottle | 350X80 | 28,000 |
| 8. | British empire (Strong) Beer Bottle | 240X150 | 36,000 |
| 9. | Amstel Beer Bottle | 120X160 | 19,200 |
| 10. | Black pearl Beer Bottle | 120X130 | 15,600 |
| 11. | Juno Pink Vodka 750ml | 12X960 | 11,520 |
| 12. | King Louis Brandy 750ml | 44X840 | 36,960 |
| 13. | Aspira lemon Gin 750ml | 12X840 | 10,080 |
| 14. | Bols Brandy 750ml | 12X920 | 11,040 |
| 15. | Niagra RUM 750ml | 35X800 | 28,000 |
| 16. | Enrica RUM 750ml | 18X680 | 12,240 |
| 17. | Old indie RUM 750ml | 12X720 | 8,640 |
| 18. | Desmorques 750ml | 8X840 | 6,720 |
| 19. | Lamartin Brandy 1000ml | 33X960 | 31,680 |

| | | | |
|---|---|---|---|
| 20. | 1848 XO Brandy 1000ml | 16x1120 | 17,920 |
| 21. | Morpheus XO blue 375ml | 24X620 | 14,880 |
| 22. | Louis vernant 375ml | 24X460 | 11,040 |
| 23. | Royal Accord blue 375ml | 46X420 | 19,320 |
| 24. | Royal Accord blue 180ml | 22X210 | 4,610 |
| 25 | Black Gold Brandy 180 ml | 96X210 | 20,160 |
| | | Total | 4,53,310 |

மேற்படி மதுபாட்டில்கள் குறித்து விற்பானையாளர் நாராயணனிடம் கேட்க அவர் தனக்கு எதுவும் தெரியாது என கூறினார். பின்பு, 11406 கடையின் மேற்பார்வையாளர் திரு.பார்த்தசாரதியை தொடர்பு கொண்டு எங்குள்ளீர்கள் என கேட்டபோது அவர் சென்னையில் உள்ளதாகவும் தற்போது வர இயலாது எனவும் தெரிவித்தார். பின்பு, மேற்படி விபரத்தை விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.முருகன் அவர்களை தொடர்பு கொண்டு கூறி சம்பவ இடத்திற்கு வருமாறு கூறினேன். அதன்படி அவர் சம்பவ இடத்திற்கு வந்தார். அவரிடம் மது பாட்டில்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த அறையையும், அங்கிருந்த பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டில்களையும் காண்பித்தபோது, இது அனுமதிக்கப்பட்ட கடையில் வைக்காமல் தனியார் இடத்தில் மதுபாட்டில்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதால் இது சட்டவிரோதமனது மற்றும் பறிமுதல் செய்ய தகுந்ததாகும் என தெரிவித்தார். பின்பு, நான் மேற்படி பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டில்களை விசாரணைக்காக கைப்பற்றி உரிய பாதுகாப்பிற்காக விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.முருகன் என்பவரிடம் ஒப்படைத்தேன். பின்பு கடையின் வருகைப்பதிவேடு குறித்து நாராயணன் அவர்களிடம் கேட்க அதனை கடையின் மேசையிலிருந்த வருகைப்பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி வருகைப் பதிவேட்டினை நான் ஆய்வு செய்தபோது கடைக்கு பொறுப்பானவர்களான மேற்பார்வையாளர் பார்த்தசாரதி, விற்பனையாளர் ராமஜெயம் மற்றும் சிவக்குமார் ஆகயோர் வருகைப்பதிவேட்டில் கையொப்பமிடாமலும், எந்தவித விடுப்பு எடுக்காமலும் தன்னிச்சையாக சம்மந்தம் இல்லாத நபர்களிடம் கடையினை விற்பனை செய்ய அனுமதித்துள்ளார்கள் என்பது தெரியவந்ததால் மேற்படி வருகைப்திவேட்டை விசாரணைக்காக கைப்பற்றினேன்.

பின்பு, கடை எண் 11472-ன் உள்ளே சென்றோம். மேற்படி கடையானது வடக்கு நோக்கி வாயிற் கொண்டதாக இருந்தது. மேற்படி கடையில் மூன்று நபர்கள் இருந்தார்கள். பின்னர் பெயர் தெரிந்த N.முருகன் என்பவரை விசாரிக்க அவர் கடையில் விற்பனையாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். மற்ற இரண்டு நபர்களில் ஒருவரான சண்முகசுந்தரம் என்பவர் மேற்பார்வையாளரின் மகன் என்றும் மற்றொரு நபர் பேரங்கியூர் கிராமத்தை சேர்ந்த செளந்தராஜன் என்றும் மேற்படி இருவரும் தனிநபர்கள் என்றும், அவர்கள் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருவதாகவும் அவர்களுக்கு

மேற்பார்வையாளர் தினமும் கூலியாக ரூபாய் 300/- கொடுத்து வருவதாகவும் கூறினார். பின்பு, கடையின் மேற்பார்வையளார் பற்றி கேட்க கடையின் மேற்பார்வையாளராக ஐயப்பன் என்பவர் பணிபுரிந்து வருவதாகவும், அவர் வீட்டிற்கு சென்றுள்ளதாகவும் தெரிவித்தார். நான் விற்பனையாளர் முருகனிடம் கடையின் மேற்பார்வையாளரை தொடர்பு கொண்ட கடை வரசொல்லுமாறு அறிவுறுத்த அதன்படி முருகன் மேற்பார்வையளர் ஐயப்பனை கடைக்கு வருமாறு அழைத்தார். அதன்படி சிறிது நேரத்தில் ஐயப்பன் கடைக்கு வந்தார். பின்பு ஐயப்பனிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு திடீராய்வு வந்துள்ள விபரத்தை தெரிவித்தோம். அதன் பிறகு மேற்படி கடையை சோதனை செய்தபோது கடையின் இருப்புக்கும் விற்பனை தொகைக்கும் ரூபாய் 18,120/- அதிகமாக இருந்தது. மேற்படி தொகை குறித்து மேற்பார்வையாளர் திரு.ஐயப்பனிடம் கேட்க அவர் கடந்த மூன்று நாட்களாக மது பாட்டில்கள் விற்பனை செய்தபோது பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதலாக வாடிக்கையாளர்களிடம் இருந்து வசூலித்த தொகை என்றும் எங்களின் செலவு போக வைத்திருந்த மீதி தொகைதான் என கூறினார். எனவே, மேற்படி தொகை வாடிக்கையாளர்களிடம் இருந்து லஞ்சமாக பெற்ற கணக்கில் வராத தொகை என தெரியவந்ததால் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு கடையின் மேற்கு பக்கத்தில் பூட்டப்பட்டிருந்த குடோனில் என்ன இருக்கிறது என விசாரிக்க அவர் அந்த குடோனுக்கும் கடைக்கும் சம்மந்தம் இல்லையென்றும், அதில் மது பாட்டில் வைக்கப்பட்டுள்ளதாக கூறினார். பின்பு மேற்படி குடோனை திறக்க சொல்ல மேற்பார்வையாளர் ஐயப்பன் தன்னிடம் இருந்த சாவிகளை கொண்டு திறந்தார். அந்த குடோனை விழுப்புரம் டாஸ்மாக் மேலாளர் முன்பு சோதனை செய்ய மேற்படி அறையில் கீழ் கண்ட அட்டவணையில் கண்டுள்ள மதுபாட்டில்கள் சட்டத்திற்கு விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

<u>கடை எண் 11472 அருகே உள்ள குடோனில் சட்டவிரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டில்களின் விபரம்</u>

| வரிசை எண் | மது பாட்டில்களின் விபரம் | எண்ணிக்கை மற்றும் ஒரு பாட்டிலின் விலை | மொத்த மதிப்பு ரூபாயில் |
|---|---|---|---|
| 1. | Zingoro Beer Bottle | 204X140 | 28,560 |
| 2. | SNJ 10000 Beer Bottle | 300X140 | 42,000 |
| 3. | Amstel Beer Bottle | 48X160 | 7,680 |
| 4. | KF select Beer Bottle | 120X130 | 15,600 |
| 5. | British empire (Leger) Beer Bottle | 192X130 | 24,960 |
| 6. | KF Blue Beer Bottle | 288X150 | 43,200 |
| 7. | High Voltage Beer Bottle | 24X130 | 3,120 |

| | | | |
|---|---|---|---|
| 8. | British empire (Strong) Beer Bottle | 132X150 | 19,800 |
| 9. | KF (Mini) Beer Bottle | 96X80 | 7,680 |
| 10. | Stern (Mini) Beer Bottle | 24X80 | 1,920 |
| | | Total | 1,94,520 |

மேற்படி வகையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டில்கள் குறித்து மேற்பார்வையாளர் ஐயப்பனிடம் கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும், இது குறித்து விழுப்புரம் டாஸ்மாக் மேலாளர் அனுமதிக்கப்பட்ட கடையில் வைக்காமல் தனியார் இடத்தில் மதுபாட்டில்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதால் இது சட்டவிரோதமனது மற்றும் பறிமுதல் செய்ய தகுந்ததாகும் என தெரிவித்தார். பின்பு, நான் மேற்படி பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபாட்டில்களை விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு, மேற்படி இரண்டு குடோன்களில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை உரிய பாதுகாப்பிற்காக விழுப்புரம் மாவட்ட டாஸ்மாக் மேலாளர் திரு.R.முருகன் என்பவரிடம் ஒப்படைத்தேன். மேற்படி வகையில் கடை எண்கள் 11406 மற்றும் 11472 ஆகிய டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மதுபாட்டில் ஒன்றுக்கு அரசு விலையை விட கூடுதலாக ரூபாய் 10 வீதம் லஞ்சமாக வசூலிக்க சொன்ன 11472 கடையின் மேற்பார்வையாளர் திரு.ஐயப்பன், 11406 கடையின் மேற்பார்வையாளர் திரு.பார்த்தசாரதி மற்றும் மேற்பார்வையாளர்களின் அறிவுறுத்தலின் பேரில் லஞ்சபணம் வசூலித்த விற்பனையாளர்கள் 11472 கடையின் N.முருகன் மற்றும் 11406 கடையின் திரு.நாராயணனன் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள (XXXXXX) (G.முருகன்), ஆய்வுக்குழு ஆய்வாளர்,கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம். <u>இணைப்பு</u> 1.ரொக்கம் 31,680/- (ரூபாய் முப்பத்தோராயிரத்து அறநூற்று எண்பது மட்டும்) 2. எட்டு நபர்களின் வாக்குமூலங்கள். 3.விழுப்புரம் டாஸ்மாக் மேலாளர், மது பாட்டில்களை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை.

Sir Received the complainant and registered the same in Viluppuram V&AC, Cr.No.15/2021 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended in P.C (Amendment) Act 2018 on 30.10.2021 at 14.30hrs (sd) R.Jesudoss, 30.10.2021, V&AC, Viluppuram.

இதன் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(R.ஜேசுதாஸ்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.